தரம் - 05 மாணவர்களுக்கு நடாத்தப்படும்
புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை - 2021

பெயர்:..... **செ.பகீரதன்** (MA, BA, PGDE, Na.Dip.Teach, Dip.in.Counseling) **SLTS 1**

வினாத்தாள் **13** தமிழ் நேரம் 1.00 மணி

@ எல்லாவினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.

1. சுறுசுறுப்புக்கு உதாரணமாகக் கொள்ளக்கூடிய பிராணிகள் எவை?
   1. நாய், பூனை
   2. எறும்பு, தேனீ
   3. கொம்புத்தேனீ,பொந்துத்தேனீ

2. பேசுவோர் தன்னைச் சுட்டுவது
   1. தன்மை
   2. முன்னிலை
   3. படர்க்கை

3. அங்குமிங்கும் என்பது
   1. மரபுத்தொடர்
   2. இரட்டைக்கிளவி
   3. இணைமொழி

4 விடா முயற்சிக்கு பொருத்தமான பழமொழி யாது?
   1. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
   2. அழுதபிள்ளை பால் குடிக்கும்
   3. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

5. கம்பி (க) என்ற சொல்
   1. மாற்றொலி
   2. இயல்பொலி
   3. வினைச்சொல்

6. ஒளி என்ற வினைச் சொல்லின் பொருள் யாது?
   1. மறைதல்
   2. சத்தம்
   3. வெளிச்சம்

7. அவன் எய்த பாணம் பட்டு மான் கீழே விழுந்தது. இதில் பாணம் என்பது
   1. சோடா
   2. அம்பு
   3. வில்

www.lkedu.lk

8. **சூழல்** என்ற சொல்லில் இடம்பெற்ற உயிர்க்குறி எது?
   1. கீழ்காலும் சுழியும்
   2. மடக்கேறு
   3. கீழ்க்கால்

10. சகலரும் பொதுவாக அறிந்து கொள்வதற்கான செய்தி அல்லது தகவல்
   1. அறிவுறுத்தல்
   2. கட்டளை
   3. அறிவித்தல்

11. கரடி உறுமும் என்பது போல எருமை
   1. கத்தும்
   2. எக்காளமிடும்
   3. உறுமும்

12. மானின் ஆண் கலை எனின் மயிலின் ஆண்
   1. போத்து
   2. பிணை
   3. கடுவன்

13. **மீனினம் ஓடிப்பரக்குதம்மா! ஊடே ..... ஓடமொன்று செல்லுதம்மா** இடைவெளியில் வரவேண்டிய சொல்
   1. படகு
   2. கப்பல்
   3. வெள்ளி

14. **பாலைப் போல நிலவு** பவனி வரப் போகுது தடித்த எழுத்துச் சொல் குறிப்பது?
   1. அடுக்கிடுக்குத் தொடர்
   2. உவமைத் தொடர்
   3. மரபுத்தொடர்

15. அவள் கலகலவெனச் சிரித்தாள் இதில் **கலகல** என்பது
   1. இணைமொழி
   2. இரட்டைக்கிளவி
   3. அடுக்குமொழி

(30 புள்ளிகள்)

02) வேறுபட்ட கருத்தைத் தரும் சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. அகழி, கிடங்கு, கேணி, கடல்
2. ஞாலம், விண், பூமி, தரணி
3. கோபம், சினம், அன்பு, சீற்றம்

www.lkedu.lk

4.	சூரியன்,	ஞாயிறு,	சந்திரன்,	பரிதி
5.	துன்பம்,	இன்பம்,	இன்னல்,	துயர்

(5 புள்ளிகள்)

03) சேர்த்து எழுதுக.

1. தேயிலை + நீர் :.....
2. தேன் + நீர் :.....
3. மலை + உச்சி :.....
4. முள் + செடி :.....
5. மரம் + வேர் :.....
6. கல் + தூண் :.....
7. பல் + பொடி :.....
8. மண் + குடம் :.....
9. பூ + கொடி :.....
10. தெற்கு + திசை :.....

(10 புள்ளிகள்)

04) அடைமொழியைச் சேர்த்து எழுதுக.

1. நாய் இறைச்சியை தின்றது

   .....

2. ஆடு குழை தின்றது

   .....

3. கோழி பாம்பைக் கண்டது

   .....

4. கிளி பழம் கொத்தியது

   .....

5. வண்டு தேனைக் குடித்தது

   .....

05) பின்வரும் சுருக்கக் குறியீட்டை விரித்து எழுதுக. (10 புள்ளிகள்)

1. இ.ம.வ :.....
2. இ.மி.ச :.....
3. இ.ஒ.கூ :.....
4. இ.ரூ.கூ :.....
5. இ.பெ.கூ:.....

(10 புள்ளிகள்)

www.lkedu.lk

06) பழமொழியின் கருத்தை எழுதுக.

1. ஆழம் அறியாமல் காலை விடாதே.

.....

2. வெள்ளம் வரும் முன் அணை கட்ட வேண்டும்

.....

3. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.

.....

4. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

.....

5. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு

.....

(10 புள்ளிகள்)

07) பின்வரும் ஒரு மொழிகளுக்கான தொடர்மொழிகளை எழுதுக.

1. போலி :.....
2. கப்பம் :.....
3. கைம்மருந்து :.....
4. தீர்க்கதரிசி :.....
5. பட்டிமன்றம் :.....

(10 புள்ளிகள்)

08) பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

1. வாயூறுதல் :.....
2. பூசி மெழுகுதல் : .....
3. தாளம்போடுதல் : .....
4. கைதூக்குதல் : .....
5. கண் திறத்தல் : .....

09) விடை எழுதுக. (10 புள்ளிகள்)

1. உயர்திணை , பன்மை , படர்க்கைப் பெயர்ச்சொல்.....
2. தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் .....
3. அ்றிணை , ஒருமை , வினைச் சொல் .....
4. முன்னிலை , பன்மை , பெயர்ச் சொல் .....
5. அ்றிணை , பன்மை , பெயர்ச் சொல்.....

(05 புள்ளிகள்)

www.lkedu.lk